14.03.2024

OS. 44/2020

வா.சா.1 சுப்ரமணியன், த/பெ. சுந்தரம்

வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா சொத்தின் கிரய பத்திரமானது எனது சகோதரி சரோஜா பெயரில் உள்ளது என்றால் சரிதான். அப்துல்ரகுமான் என்பவரிடமிருந்து கிரயம் வாங்கப்பட்டது. என்னால் கிரய அக்ரிமெண்ட் போடப்பட்டது. 05.07.2000 ல் சரோஜா பெயரில் கிரயம் வாங்கப்பட்டது. சரோஜாவிற்கு 2 மகன்கள் அதில் ஒருவர் இறந்துவிட்டார். சரோஜாவின் மகன் மகேந்திரன் என்பவர் இன்று இந்நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு நடவடிக்கைகளுக்கு மகேந்திரன் என்னுடன் சேர்ந்து வருவார் என்றால் சரிதான். பிரதிவாதி மகேந்திரனின் மனைவி என்றால் சரிதான். தாவா சொத்தில் சரோஜா என்பவரால் மாடிவீடு கட்டப்பட்டு கிரகபிரவேசம் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. கிரகபிரவேசம் செய்யவில்லை. நான் தாவா சொத்து வாங்கப்பட்ட சமயத்தில் அரசு சார்வு நிறுவனமான கூட்டுறவு சங்கத்தில் கணக்காளராக பணியிலிருந்தேன். சொத்து வாங்கியது வீடு கட்டியது சம்பந்தமாக நான் அரசாங்கத்திற்கு தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. அரசு ஊழியராக இருந்து சொத்து வாங்கினாலோ வீடு கட்டினாலோ அரசுக்கு தெரிவிக்க வேண்டும் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விவரம் தெரியும் என்றும் தற்போது அரசுக்கு தெரிவிக்க வேண்டிய விவரம் தெரியாது என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா வீடு மகிலம்பத்து என்ற இடத்தில் உள்ளது. நெடுங்காடு செருமாவிளங்கை என்ற கிராமத்தில் வீடு கட்டி இருந்து வருகிறேன் என்றால் வாடகைக்கு குடியிருந்து வருகிறேன். நான் சொந்த வீட்டில் தான் வசிக்கிறேன் என்றும் தற்போது வாடகை வீட்டில் வசிப்பதாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம். T.பாலமுருகன்,

சார்பு நீதிபதி,

திருவாரூர்(மு.கூ.பொ)